**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | | |
|---|---|---|
| SC.No. | : | 44/2024 |
| P.W. | : | 9 |
| Name | : | மருத்துவர் திரு. சங்கர் |
| Father Name | : | திரு. சுப்ரமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14.10.2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இணைப் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16-11-2020 அன்று பெருந்துறையில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் பணியில் இருந்தபோது புளியம்பட்டி காவல் ஆய்வாளர் அவர்களின் 15-11-2020 கு.எண். 739/2020 கடிதத்தின்படி சுமார் 77 வயது மதிக்கத்தக்க சுப்ரமணி என்ற ஆண் பிரேதமானது த.கா. முத்துமாணிக்கம் என்பவரால் பிரேத பரிசோதனைக்கு கொண்டுவரப்பட்டது. பரிசோதனை துவங்கிய

நேரம் காலை 11மணி. பிண விறைப்பு தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. சுமாரான போஷாக்குள்ள ஆண் பிரேதத்தில் பின்வரும் காயங்கள் காணப்பட்டது. சிவந்த சிராய்ப்பு காயங்கள் 1 5X0.5 செ.மீ அளவில் வலதுதோள்பட்டையில் மேல்புறம் காணப்பட்டது. 2. 9X5 செ,.மீ அளவில் வலபக்க நெஞ்சு பகுதியின் மையப்பகுதியின் உட்பகுதியில் காணப்பட்டது. 3. 3X2 செ.மீ அளவில் இடதுபக்க நெஞ்சு பகுதியில் கீழ்பகுதியின் மையப்பகுதியில் காணப்பட்டது. 4. 5X3 செ.மீ அளவில் 4X2 செ.மீ அளவில் மற்றும் 2X1 செ.மீ அளவில் இடது பக்க நெஞ்சுபகுதியின் முன்பகுதியின் கீழ்பகுதியில் காணப்பட்டது. கிழிந்த காயம் 2X1 செ.மீX சதை ஆழத்திற்கு தாடைப்பகுதியில் காணப்பட்டது. தலையினை கூராய்வு செய்து பார்த்தபோது தலைத்தோலின் அடிப்பகுதியில் தலையின் பின்புறத்தில் 8X6 செ.மீ X தலை தோல் ஆழத்திற்கு சிவந்த கன்றிய காயம் காணப்பட்டது. மண்டை ஓட்டின் எலும்புகள் மற்றும் மூளையின் மேல்தோல் நல்ல நிலையில் இருந்தன. மூளையில் அடர்ந்த ரத்தக்கசிவு இடதுபகுதியின் மேல்பரப்பு, வெளிப்பரப்பு மற்றும் பின்பகுதியில் காணப்பட்டது. நுண்ணிய ரத்தகசிவு மூளையின் அனைத்து பரப்பிலும் காணப்பட்டது. மண்டை ஓட்டின் அடிப்பகுதி உடையாமல் காணப்பட்டது. கழுத்து பகுதியை கூராய்வு செய்து பார்த்தபோது சிவந்த கன்றிய காயங்கள் 1. 7 X6X1 செ.மீ அளவில் கழுத்து பகுதியின் முன்பகுதியின் மையப்பகுதி மற்றும் கீழ்பகுதியில் காணப்பட்டது. 2. 8X7X1 செ.மீ அளவில் இடதுபக்க கழுத்து பகுதியின் வெளிப்புறத்தில் காணப்பட்டது. 3. 4X3X0.5 செ.மீ அளவில் வலதுபக்க கழுத்து பகுதியின் வெளிப்புறத்தில் காணப்பட்டது. நாவடி எலும்பு உடையாமல் இருந்தது. மூச்சுகுழல் பகுதி நல்லநிலையில் இருந்தது. நெஞ்சு பகுதியை கூராய்வு செய்து பார்த்தபோது

அதன் உள் பகுதியில் 260 கி. அளவில் உறைந்த ரத்தம், 420 மிலி அளவில் திரவ ரத்தமும் காணப்பட்டது. 3 முதல் 5 வரை வலதுபக்க விலா எலும்பு அதன் மையபகுதியில் உடைந்து அதனை சூழ்ந்து ரத்தக்கசிவு காணப்பட்டது. 3 முதல் 6 வரை இடதுபக்க விலா எலும்புகள் அதன் வெளிப்புறத்தில் உடைந்து அதனை சூழ்ந்து ரத்தக்கசிவு காணப்பட்டது. இருதயம்த சரியான அளவிலும், அதன் வலதுபக்க அறையில் உறைந்த ரத்தமும், இடது பக்க அறை காலியாகவும் இருந்தது. வால்வுகள் மற்றும் ரத்தநாளங்கள் நல்லநிலையிலும், எந்த அடைப்பும் இன்றி காணப்பட்டது. நுரையீரல்கள் சரியான அளவிலும், அதனை கூராய்வு செய்து பார்த்தபோது ரத்தம் தோய்ந்தும் காணப்பட்டது. வயிற்று பகுதியை கூராய்வு செய்து பார்த்தபோது இரைப்பையில் 360 கி. அளவில் பகுதி செரிமானம் அடைந்த உணவுப்பொருட்கள் காணப்பட்டது. அதன் உள்தோல் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. குடல் பகுதியில் பகுதி செரிமானம் அடைந்த பழுப்பு நிற உணவுப்பொருட்கள் காணப்பட்டன. மண்ணீரல், கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள் சரியான அளவிலும், அதனை கூராய்வு செய்து பார்த்தபோது ரத்தம்தோய்ந்தும் காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக இருந்தது. இடுப்பு மற்றும் தண்டுவட எலும்புகள் உடையாமல் இருந்தன. உடல் உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு, ரசயான பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டு, இறுதி கருத்து என்னால் வழங்கப்பட்டது. இறுதி கருத்தின்படி மேற்கூறிய நபர் கழுத்து பகுதி, நெஞ்சு பகுதி மற்றும் தலைப்பகுதியில் ஏற்பட்ட அழுத்தங்களின் மொத்த விளைவால் இறந்திருக்கக்கூடும் என்று சான்று வழங்கினேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.5. எனது இறுதிஅறிக்கை அ.சா.ஆ.6. நான் வழங்கிய இறுதி அறிக்கையானது கோவை**

**வட்டார தடய அறிவியல் ஆய்வுக்கூடம் Chemical Analysis Report No. CBE/Tox.H/3512/2020 Dt. 22.07.2021 ஆய்வு செய்து வழங்கினேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரேத பரிசோதனை செய்த சமயத்தில் பிரேதத்தின் மீது ஆடைகள் எதாவது இருந்ததா என்றால் அதை போலீசார் கைப்பற்றியிருப்பார்கள். பிரேதத்தின் மீது தீக்காயங்கள் எதுவும் இருக்கவில்லை என்றால் சரிதான். ஒரு நபர் குடிபோதையில் கரடுமுரடான பகுதியில் விழுந்து உருளும்போது நான் பிரேதத்தில் கண்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் இல்லை. பொதுவாக ஒரு நபர் அதிகமான குடிப்பழக்கம் வைத்திருந்து பல வருடங்களாக தொடர்ந்திருந்தால் மரணம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் அவர் எடுத்துக்கொள்ளும் ஆல்கஹாலின் அளவை பொருத்ததாகும். எனது அறிக்கையில் மேற்படி நபர் பிரேத பரிசோதனைக்கு எத்தனை மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்கலாம் என்று நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி பிரேதமானது பிரேத கிடங்கில் குளிர்சாதன பெட்டியில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்ததால் நேரம் என்னால் குறிப்பிட இயலவில்லை.

**மறு விசாரணை இல்லை.**